தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடு வர்
*******

ஆணை எண் 45/பேரூ/2023
நாள் 03.05.2023

திரு.M.சைய்யது சுலைமான்,
மணிமுத்தாறு,
திருநெல்வேலி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
மணிமுத்தாறு சிறப்பு நிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு, பொதுப்பணித்துறை குடியிருப்பு, H70 என்ற முகவரியில் வசிக்கும் திரு.M.சைய்யது சுலைமான் என்பவரின் 04.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.02.2023 அன்று பெறப்பட்டு 45/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு, பொதுப்பணித்துறை குடியிருப்பு, H70 என்ற முகவரியில் வசிக்கும் திரு.M.சைய்பது சுலைமான் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"அம்பாசமுத்திரம் தாலுக்கா, மணிமுத்தாறு சிறப்பு நிலை பேரூராட்சியில் பொருள்கள் கொள்முதல் செய்ததில் தொடர்ந்து முறைகேடு நடந்து வருகிறது. மின் உதிரிப் பொருட்களை மாலானி லைட்டிங் கம்பெனியிடம் கடந்த 04.02.2022 ஆம் தேதி ரூ 2,77,250/-க்கும், திருநெல்வேலியில் உள்ள ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் நிறுவனத்திடம் கடந்த 17.02.2022 ஆம் தேதியன்று ரூ 10,67,250/-க்கும், 26.3.2022ஆம் தேதியன்று ரூ 9,246/-க்கும், 05.07.2022 ஆம் தேதியன்று ரூ9,64,512/-க்கும், 11.11.2022-ஆம் தேதி ரூ 7,70,272/-க்கும், மற்றும் 18.11.2022ஆம் தேதியில் ரூ3,39,958/-க்கும் என ஆகமொத்தம்

ரூ 34,28,488/-க்கு கொள்முதல் செய்துள்ளார்கள். மேற்படி மின் உதிரிப் பொருட்களை வழங்கிய திருநெல்வேலியில் உள்ள ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் நிறுவனம் மும்பையில் உள்ள Kiran Brand நிறுவனத்தில் மேற்படி மின் உதிரிப் பொருட்களை கொள்முதல் செய்துள்ளது. அதில் 24W/36W Super Eco Led Street Light-ஐ ரூ 380/- மதிப்புள்ள லைட்டை, ரூ 2600/-க்கு விலை மதிப்பீட்டைவிட பன்மடங்கு கூடுதல் விலைக்கு செயல் அலுவலர், தலைவர் கூட்டு சேர்ந்து பேரூராட்சியின் நிதியை கையாடல் செய்து மோசடி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு, கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டு மோசடியாக செலவு சீட்டு கணக்கு தயாரித்து கணிசமான தொகையை கையாடல் செய்து உள்ளனர். அதனை விசாரணை செய்தால் மோசடி செலவு சீட்டு தயாரித்து பல இலட்சம் ரூபாய் மோசடி செய்த உண்மை தெரியவரும் இது சம்பந்தமாக நான் மணிமுத்தாறு பேரூராட்சி அலுவலக பொது தகவல் அலுவலரிடம் கோரியதில், தகவல் வழங்க கேட்டு கொடுத்த மனு மீது உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் தகவல் வழங்க இயலாது என்று, தகவல் தர மறுத்துவிட்டார். இப்பேரூராட்சிக்கு தொழில் வரியாக ஆண்டிற்கு ரூ 9/– கோடியும், சொத்துவரி மற்றும் இதர வரிகளின் மூலம் ரூ 15/– இலட்சமும் வருவாய் உள்ளதால் பேரூராட்சியின் தலைவர், செயல் அலுவலர், தலைமை எழுத்தர் தன்னிச்சையாக நகர்மன்ற ஒப்புதலின்றி பொருட்களை முறைகேடாக கொள்முதல் செய்து வருகின்றனர்.

இதே நிலை தொடர்ந்தால் பேரூராட்சியின் பொது நிதிக்கு பேராபத்து ஏற்படும் என்பதால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மிகவும் பணிவுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் மணிமுத்தாறு பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

(3) மணிமுத்தாறு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 08.03.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"மணிமுத்தாறு சிறப்புநிலை பேரூராட்சியில் 2022 –2023 ஆம் நிதியாண்டிற்கு தெருவிளக்குகள் கொள்முதல் செய்வதற்கான விளம்பரம் திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் வெ.ஆ.எண்.57 / செ.ம.தொ.அ.திலி / 2022–ன்படி 19.03.2022 அன்று பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் 2021–2022 ஆம் நிதியாண்டில் தெருவிளக்குகள் விநியோகம் செய்த விநியோகிஸ்தர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.63/2022/அ1 நாள் 15.03.2022–ன்படி அனுப்பப்பட்டது. அஞ்சல் அனுப்புகை பதிவேடு பக்கம் எண். 12–ல் இதற்கான பதிவுகள் உள்ளது. மேலும் உள்ளூர் விநியோகிஸ்தர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் மணிமுத்தாறு பேரூராட்சி அறிவிப்பு பலகை, மணிமுத்தாறு கிராம நிர்வாக அலுவலகம், ஆலடியூர் கிராம நிர்வாக அலுவலகக் கட்டிடம் ஆகிய அரசு அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்த விளம்பரத்தினை பார்வையிட்டு திருநெல்வேலியைச் சேர்ந்த ஷா ஜெகன்லால் ஜெயந்திலால்

ஜெயின் என்பவரும், மாலானி லைட்டிங் கம்பெனி, திருநெல்வேலி என்பவரும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தனர்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் திருநெல்வேலி மண்டல உதவி இயக்குநர் அவர்களின் அலுவலக ந.க.எண். 1802/2022/ப1 நாள் 13.04.2022–ன்படி நியமனம் செய்யப்பட்ட ஆய்வுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆய்வுக்குழுவினர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட விலைவிகிதங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப்பணித்துறை விலைவிகிதங்களுடன் ஒப்பிட்டு சரிபார்த்து திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட தென்காசி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ஒரேவிலை நிரக்கில் சரிபார்த்து வழங்கியதன்படி பேரூராட்சி மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டு பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் எண்.39 நாள் 02.06.2022–ன்படி ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. பகிரங்கமான முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் நியமித்த ஆய்வு அலுவலர்களால் மணிமுத்தாறு பேரூராட்சி ஒப்பந்தப்புள்ளி சரிபார்த்து அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து பேரூராட்சி மன்றத்தால் மன்ற அனுமதி வழங்கப்பட்டது எனவும் இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

<u>தெருவிளக்குகள் உதிரி பொருட்கள் கொள்முதல் விபரம்</u>

மணிமுத்தாறு பேரூராட்சிக்குட்பட்ட மாஞ்சோலை, நாலுமுக்கு, குதிரைவெட்டி ஊத்து ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகளாக தெருவிளக்குகள் இல்லை என்பதாலும், எஸ்டேட் நிர்வாகத்தில் குத்தகை காலம் முடிவடைவதால் தெருவிளக்கு போட இயலாது எனவும் பாம்பே பர்மா டிரேடிங் கம்பெனி வலியுறுத்தியதால் வனவிலங்குகளால் ஆபத்து இருப்பதை கருத்தில் கொண்டு எஸ்டேட் பகுதியில் உள்ள ஐந்து வார்டு உறுப்பினர்களும் புதிதாக தெருவிளக்குகள் அமைக்க கேட்டதன் அடிப்படையிலும், உள்ளாட்சி தேர்தல் நடைபெறாமல் இருந்த காரணத்தினால் பல ஆண்டுகளாக பேரூராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகள் மற்றும் உயர் கோபுர மின்விளக்குகள் பழுது சரி செய்யாமல் இருந்ததாலும், மணிமுத்தாறு பேரூராட்சி பகுதி சுற்றுலா தலம் என்பதாலும் அனைத்து தெருவிளக்குகளையும் போர்க்கால அடிப்படையில் சரி செய்ய வேண்டும் என பேரூராட்சி மன்றத்தின் தீர்மானம் எண்.91 நாள் 02.06.2022, தீர்மானம் 526 நாள் 23.09.2021–ன் அடிப்படையில் மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் செய்யவும், உயர் கோபுர மின்விளக்குகள் சரிபார்க்கவும், புதிய தெருவிளக்குகள் அமைக்கவும் அனுமதிக்கப்பட்டது. பழுதுகள் தொடர்பான விபரம் மற்றும் தேவையான மின்உதிரி பொருட்கள் கொள்முதல் செய்யக்கேட்டு மின்பணியாளர் விண்ணப்பத்தின் அடிப்படையிலும் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது. கொள்முதல் செய்யப்பட்ட அனைத்து பொருட்களும் 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுக்கான தெருவிளக்கு இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு மின்பணியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தலைமை எழுத்தர் ஆகியோரின் ஒப்புதல் பெறப்பட்டது. பழுதான பொருட்கள் மாற்றி புதிய தெருவிளக்குகள் போடும் போது வரப்பெற்ற பழையபொருட்கள் 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுக்கான பழைய பொருட்கள் இருப்பு பதிவேட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தக்காரருக்கு தொகை வழங்குவதற்கு அனைத்து

விலைபட்டியல்களும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு தீர்மானம் எண்.91 நாள் 02.06.2022, தீர்மானம் எண். 526 நாள் 23.09.2021 ஆகியவற்றின்படி மன்ற அனுமதியும், 18.10.2022–ல் மன்ற முன்அனுமதியும் பெறப்பட்டு மாவட்ட நிர்வாகத்தின் மேலொப்பம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை ந.க. எண். 488/2022/ப1 நாள் 24.01.2022 –ன்படி ரூ 2,77,250/– க்கு பட்டியல் அனுமதியும், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை ந.க. எண். 503/2022/ப1 நாள் 24.01.2022–ன்படி ரூ 10,67,250/– க்கு பட்டியல் அனுமதியும், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை ந.க.எண். 3792.2022.ப1 நாள் 27.06.2022–ன்படி ரூ 9,64,512/–க்கு பட்டியல் அனுமதியும், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை ந.க.எண்.6804/2022/ப1 நாள் 04.11.2022–ன்படி ரூ 7,70,272/–க்கு பட்டியல் அனுமதியும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை ந.க.எண்.7067/2022/ப1 நாள் 17.11.2022–ன்படி ரூ 3,39,958/– க்கு பட்டியல் அனுமதியும் பெறப்பட்டு அதன்படி விநியோகிஸ்தருக்கு காசோலைகள் வழங்கப்பட்டது. மணிமுத்தாறு பேரூராட்சி பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையான புதிய தெருவிளக்குகள் அமைப்பதற்கும், பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் இருந்த உயர் கோபுரவிளக்குகளை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், சுற்றுலா தலமான மணிமுத்தாறு பேரூராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் எரிய வைக்க வேண்டும் என பேரூராட்சி மன்றத்தால் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி வழங்கியதன் அடிப்படையில் தெருவிளக்குகள் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும் மணிமுத்தாறு பேரூராட்சியில் 2021 – 2022 ஆம் வருட மொத்த தொழில்வரி தொகை ரூ 1,40,94,215/– ஆகும். புகார்தாரர் தொழில்வரி மூலம் ரூ 9 கோடி வருவாய் ஈட்டப்படுவதாக பொய் புகார் தெரிவித்துள்ளார். இது உண்மைக்கு புறம்பானது என்ற விபரத்தினை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான மணிமுத்தாறு பேரூராட்சி செயல் அலுவலரும், 09.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.02.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) மனுதாரர் திரு.M.சைய்யது சுலைமான் என்பவர் புகார் மனு தொடர்பான ஆவணங்களை சேகரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால், தன்னால் 09.03.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு வரஇயலாது என்றும், விசாரணைக்கு மற்றொரு நாளை தெரிவித்து வாய்ப்பளிக்குமாறு கோரி, 09.03.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

(6) எதிர்மனுதாரரான மணிமுத்தாறு பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கிறிஸ்டோபர்தாஸ் என்பவர் 09.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு சிறப்பு நிலை பேரூராட்சியில் தெரு விளக்குகள் மற்றும் மின் உதிரி பொருட்களை வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி 19.3.2022 அன்று தினத்தந்தி பத்திரிகையிலும், தினசூரியன் என்கின்ற பத்திரிகையிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மற்ற எந்த பத்திரிகையிலும் பேரூராட்சியால் விளம்பரம் செய்யப்படவில்லை எனவும், .மின்னஞ்சல் ( E mail ) மூலமாக ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி குறித்து பேரூராட்சியால் தகவல் ஏதும் தெரிவிக்கப் படவில்லை. 30.3.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, 2.6.2022 அன்று மன்றத்தீர்மானம் பெறப்பட்டு 18.10.2022 அன்று நகர்மன்ற முன்அனுமதி பெறப்பட்டு 28.10.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்வதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பதிவுத் தபாலில் (Registered post) அனுப்பாமல் தபால் வில்லையிடன் கூடிய அஞ்சலில் (Ordinary post) அனுப்பப்பட்டது. அதற்கான பதிவேட்டினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மணிமுத்தாறு பேரூராட்சியில் கடந்த 2021–22ம் ஆண்டில் தெருவிளக்குகள் மற்றும் மின்பொருட்கள் கொள்முதல் செய்தது குறித்த அசல் பதிவேடுகள் (Original Registers) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ளதால் அப்பதிவேடுகளை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. இம்முறை மன்றம் பிரிதொரு வாய்ப்பு அளிக்குமேயானால் மேற்கண்ட பதிவேடுகளையும், மேலும் இந்நேர்வு தொடர்பான கூடுதல் விவரங்களின் நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 8.3.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(7) மனுதாரரின் கோரிக்கையினை ஏற்றும், மணிமுத்தாறு பேரூராட்சி செயல் அலுவலர் உரிய அசல் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பொருட்டும், 28.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும் மற்றும் எதிர்மனுதாரருக்கும் 15.03.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(8) மனுதாரர் திரு.M.சைய்யது சுலைமான் என்பவர் 28.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

மணிமுத்தாறு பேரூராட்சி அலுவலர்கள் குடிநீர், சுகாதாரம், சாலை வசதி, தெருவிளக்கு வசதி ஆகியவற்றை முறையாகவும் முழுமையாகவும் செய்து கொடுக்காமல் தன்னிச்சையாகவும், தனி நபர் ஆதாயத்துடனும் செய்து வருகின்றனர். பேரூராட்சியின் மேற்கண்ட அலட்சிய செயல் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் பேரூராட்சியில் ஒப்பந்தம் மற்றும் நிரந்தரப் பணியாளர்கள் நியமனங்களிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. அதே போன்று ஒப்பந்தப் புள்ளியிலும் பொருட்களை கொள்முதல் செய்வதிலும் பெருமளவில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. திருநெல்வேலியில் உள்ள ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் நிறுவனத்திடம் மின்பொருட்கள் பேரூராட்சியால் வாங்கப்பட்டுள்ளது. 380 ரூபாய் மதிப்புள்ள 1 மின்விளக்கை பன்மடங்கு அதிகமாக அதாவது 1 மின் விளக்கை ரூபாய் 2600/— க்கு பேரூராட்சியால் வாங்கப்பட்டுள்ளது. இதனால் பேரூராட்சியின் பெரும் நிதி, மோசடியாக கையாடல் செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் வரி வசூலிப்பதிலும் மணிமுத்தாறு பேரூராட்சியில் முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன.

எனவே மணிமுத்தாறு பேரூராட்சியில் நடைபெறும் மேற்கண்ட முறைகேடுகளை களையவும், முறைகேடுகளுக்குக் காரணமான அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்து, எனது 12.1.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

(9) எதிர்மனுதாரரான மணிமுத்தாறு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 28.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:—

9.3.2023 அன்று திரு. சைய்யது சுலைமான் என்பவரின் மனுவின் மீதான விசாரணையில் கலந்துகொண்டு வாக்குமூலம் அளிக்கையில், 2021—22ம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்ததைத் தொடர்ந்து இன்று இம்முறை மன்றத்தில் ஆஜராகி பின்வரும் அசல் ஆவணங்களை முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்:

- 2021- 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி குறித்து நாளிதழில் வெளியிடப்பட்ட விளம்பரம்
- பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பியது குறித்த அஞ்சல் பதிவேடு
- வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (Special Officer) இயற்றிய தீர்மானத்தின் அசல் பதிவேடு
- பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான மன்றத்தின் அனுமதி குறித்த பதிவேடு
- அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை நிர்ணய ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement)

மேலும், இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 28.3.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

(10) மணிமுத்தாறு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 28.03.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மணிமுத்தாறு சிறப்புநிலை பேரூராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டுக்கான தெருவிளக்குகள் கொள்முதல் செய்வதற்கான விளம்பரம், திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் 09.02.2021 அன்று தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் 2021–2022 ஆம் நிதியாண்டில் தெருவிளக்குகள் விநியோகம் செய்த விநியோகஸ்தர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.70/2021/அ1, நாள் 04.02.2021–ன்படி அனுப்பப்பட்டது. அஞ்சல் அனுப்புகை பதிவேடு பக்கம் எண்.42 முதல் 49 வரை இதற்கான பதிவுகள் உள்ளது. மேலும் உள்ளூர் விநியோகதிஸ்தர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் மணிமுத்தாறு பேரூராட்சி அறிவிப்புப் பலகை மணிமுத்தாறு கிராம நிர்வாக அலுவலகம், ஆலடியூர் கிராம நிர்வாக அலுவலக கட்டடம் ஆகிய அரசு அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூலம் திருநெல்வேலி ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின், மாலானி லைட்டிங் கம்பெனி மற்றும் குமார் ஏஜென்சிஸ் பாளையங்கோட்டை ஆகிய 3 நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தனர்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்து, குறைந்த விலைப்புள்ளி பேரூராட்சி மன்றத்தால் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியாக தீர்மானம் எண்.486(எ) நாள் 25.02.2021–ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள் உதிரிபொருட்கள் கொள்முதல் விபரம்

பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டும், மின்பணியாளர் விண்ணப்பத்தினை ஏற்று, போர்க்கால அடிப்படையில் சரி செய்ய வேண்டும் என பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.526, நாள் 23.09.2021–ன்படி மின் உதிரி பொருட்கள் கொள்முதல் செய்யவும், உயர்கோபுர மின் விளக்குகள் சரிபார்க்கவும், புதிய தெருவிளக்குகள் அமைக்கவும் அனுமதிக்கப்பட்டது. பழுதுகள் தொடர்பான விபரம் மற்றும் மின் உதிரி பொருட்கள் 2021–2022 ஆம் ஆண்டுக்கான தெருவிளக்கு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு மின்பணியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தலைமை எழுத்தர் ஆகியோரின் ஒப்புதல் பெறப்பட்டது. பழுதான பொருட்கள் மாற்றி புதிய தெருவிளக்குகள் போடும் போது வரப்பெற்ற பழைய பொருட்கள் 2021–2022 ஆம் ஆண்டுக்கான பழைய பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் கொள்முதல் செய்வதற்காகும் செலவினத்தை பேரூராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள இப்பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.526 நாள் 23.09.2021–ன்படி அங்கீகரிக்கப்பட்டது.

திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை ந.க.எண்.488/2022/ப1 நாள் 24.01.2022–ன்படி ரூ 2,77,250/– க்கு பட்டியல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் விநியோகஸ்தருக்கு காசோலை வழங்கப்பட்டது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும் மணிமுத்தாறு பேரூராட்சியில் 2021–2022–ம் வருட மொத்த தொழில்வரி தொகை ரூ 140,94,215/– ஆகும். புகார்தாரர், தொழில்வரி மூலம் 9 கோடி வருவாய் ஈட்டப்படுவதாக பொய்புகார் தெரிவித்துள்ளார். இது உண்மைக்கு புறம்பானது என்ற விபரத்தினை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(11) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மணிமுத்தாறு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறைச் சேர்ந்த மனுதாரர் திரு.M.சைய்யது சுலைமான் என்பவர் தனது 12.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மணிமுத்தாறு பேரூராட்சியில் தெரு விளக்குகள், மின் உதிரிப் பொருட்களை முறைகேடாக கூடுதல் விலையாக மொத்தம் ரூ 37,28,488 மதிப்பீட்டில் பேரூராட்சி அலுவலர்கள் கொள்முதல் செய்துள்ளனர் என்றும் இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் புகாராக தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பேரூராட்சியில் 2021–22 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின்சாதன உபகரணங்கள் விநியோகம் செய்திட 04.02.2021 நாளிட்ட விளம்பரமானது 09.02.2021 அன்று நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு, பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு சாதாரண தபாலில் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது, தவிர பேரூராட்சி அலுவலக தகவல் பலகையிலும், பேரூராட்சிக்குட்பட்ட அரசு அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் சில இணங்களுக்கு குறைந்த விலை குறிப்பிட்ட திருநெல்வேலி மாலானி லைட்டிங் கம்பெனி என்கிற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியும், சில மின்உதிரிப் பொருட்களின் விலைப்பட்டியலை

மாலானி லைட்டிங் கம்பெனியைவிட குறைவான விலையினை குறிப்பிட்ட ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் என்கிற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியும் தனி அலுவலர் / திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டு தீர்மான எண்.486 (எ) நாள் 07.01.2022–ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒ்ப்பந்தப்புள்ளிகளின்படி பொருட்களை வழங்கிய வகையில் மாலானி லைட்டிங் கம்பெனிக்கு 04.02.2022 அன்று ரூ 2,77,250/–ம், ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் கம்பெனிக்கு பொருள்கள் கொள்முதல் வகையில் 24.01.2022 அன்று ரூ 10,67,250/–ம், ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

இதனைத் தொடர்ந்து, மணிமுத்தாறு பேரூராட்சியில் 2022–23 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் தெரு மின்விளக்கு உதிரிப் பொருட்கள் கொள்முதல் மற்றும் பழுது நீக்கம் செய்யும் வகையில் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி தொடர்பான 15.03.2022 நாளிட்ட அறிவிப்பினை செய்தித்தாளில் வெளியிட்டும், பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு சாதாரண தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதையும் மற்றும் பேரூராட்சி அலுவலகம் மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட பிற அரசு அலுவலக தகவல் பலகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டும் உள்ளது ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தளவு ஒப்பந்தப்புள்ளி கோரிய ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் என்ற நிறுவனத்திற்கு பேரூராட்சி மன்ற 02.06.2022 நாளிட்ட தீர்மானம் எண்.39–ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திலிருந்து தெரு மின்விளக்குகளின் பராமரிப்புக்கு தேவையான மின்உதிரிப் பொருட்கள் வாங்கிய வகையில் ரூ 9,64,512/– தொகையினை 27.06.2022 நாளிட்ட திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் செயல்முறைகள் ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 04.11.2022 மற்றும் 17.11.2022 நாளிட்ட செயல்முறைகள் ஆணைகளின்படி முறையே ரூ 7,70,272/– மற்றும் ரூ 3,39,985/– தொகை வழங்கிட அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ந.க.எண். 180/2022/ப1, 13.04.2022 நாளிட்ட குறிப்பாணையில், பிறவற்றுள், 2022 – 23 ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிகளில் தெருவிளக்கு உதிரிச் சாமான்கள், குடிநீர் உதிரிபாகங்கள், பொது சுகாதார பொருட்கள் மற்றும் எழுதுப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் போது, பின்பற்றப்படவேண்டிய நெறிமுறைகள் குறித்து அறிவுரைகள் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதில் தெருவிளக்கு உதிரி பாகங்களை கொள்முதல் செய்யும்போது இந்திய தரச்சான்றுடன் (ISO 9001) அரசு நிர்ணயம் செய்துள்ள விலைகளுடன் ஒப்பிட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, இதற்கென அமைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி சரிபார்ப்பு குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட வேண்டும் என திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2021–22 ஆம் ஆண்டில் மணிமுத்தாறு பேரூராட்சி மன்றம் தேர்வு செய்யப்படாத காரணத்தினால், 2021 – 22 ஆம் ஆண்டிற்கான மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைக்கு தனி அலுவலராக செயல்பட்ட திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு கிடைக்கப்பெற்றதை உறுதி செய்திடும் வகையில், பேரூராட்சிக்கு எவ்வித செலவினமும் ஏற்படா வகையில் மின்னஞ்சல் (E-Mail) மூலமாகவோ அல்லது ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு கிடைக்கப் பெற்றதை ஆதாரமாக காட்டிடும் வகையில் Speed post அல்லது Registered post-லோ அனுப்பப்படாமல் இருந்ததன் மூலம் பேரூராட்சியால் அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் முறையாக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா என்கிற ஐயம் எழுகிறது. மேலும் 2021 – 22 ஆம் ஆண்டில், ஒப்பந்தப்புள்ளி விலையினை அரசு நிர்ணயித்த விலையுடன் ஒப்பீடு செய்யப்படாமல் இருந்ததும் தெரிய வருகிறது. 2022 – 23 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி விலைகளை அரசு நிர்ணயித்த விலையோடு ஒப்பிடுகையில் ஒரு சில பொருட்களுக்கு மட்டுமே ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான பொருட்களுக்கு ஒப்பீடு செய்யப்படவில்லை என்பதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

இந்நிலையில் மணிமுத்தாறு சிறப்பு நிலை பேரூராட்சியில் 2021 – 22 மற்றும் 2022 – 23 ஆம் ஆண்டுகளில் மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் செய்ததற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முறையாக கையாளப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து, அறிக்கையினை 2 மாதக் காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் மின்உதிரிப் பொருட்கள் கொள்முதல் மேற்கொண்டதில் ஏதேனும் முறைகேடுகளோ மற்றும் பேரூராட்சிக்கு நிதியிழப்போ நடைபெற்றுள்ளதாக தணிக்கை அறிக்கை மூலம் கண்டறியப்பட்டால் 2021 – 22 மற்றும் 2022 – 23 ஆம் ஆண்டில் பணியாற்றிய சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Director of Local Fund Audit is directed to organize an inspection team to go into the entire gamut of Tender procedure adopted by the Manimutharu Town Panchayat in the year 2022, examine all the records and registers pertaining to the Tender and purchase of all items relating to electrical articles, spares, lights etc., apart from items required for water supply works and other materials used by the Town Panchayat.

A detailed report should be sent to this Forum and Director of Town Panchayat for further follow up action for any proven omissions, violations and corrupt practices employed during such purchases from the suppliers as alleged by the petitioner. The Director of Town Panchayat is directed to keep a close watch over the exercise by the Diretorate of Local Fund Audit and initiate necessary action depending on the findings the special audit team.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.M.சைய்யது சுலைமான,
H70 பொதுப்பணித்துறை குடியிருப்பு,
மணிமுத்தாறு, திருநெல்வேலி மாவட்டம்,

2) செயல் அலுவலர்,
மணிமுத்தாறு பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்,

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

04/05/23